# கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

## அமர்வு வழக்கு எண்.184/2023

### அ.சா. 5 (LW 5)

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | ஈஸ்வரி | **தொழில்** | |
| **க பெயர்** | சேகர் | **மதம்** | |
| **கிராமம்** | | **வயது** | |
| **தாலுகா** | | **தேதி** | **16.09.2025.** |

1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

எதிரி ஆஜர்.

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது பெத்தையகவுண்டன் பட்டியில் குடியிருந்து வருகிறேன். பள்ளியில் உதவியாளராக வேலை செய்கிறேன். நான் படிக்கவில்லை. வழக்கில் இறந்து போன அழகுபாண்டி எனது மகன் ஆவார். அ.சா.1. கோபிநாத்தை தெரியும். எதிரியை தெரியும். என் மகன் கோபிநாத் மற்றும் எதிரியுடன் வேலைக்கு போய் வந்தார். என் மகனும், எதிரியும் நண்பர்கள் ஆவார்கள். தேதி, மாதம் வருடம் ஞாபகம் இல்லை. சுமார் 1வருடத்திற்கு முன்பு என் மகன் வேலை செய்யும் அரவிந்திற்கு பிறந்த நாள் பார்ட்டியின் போது என் மகனுடன் மகேந்திரன், அசோக், அரவிந்தகுமார், ஆகியோருக்கிடையே சண்டை ஏற்பட்டது. அசோக்குமார், மகேந்திரன் நாளை காலை 10.00 மணிக்கெல்லாம் காலி செய்து விடுவேன் என என் மகன் என்னிடம் சம்பவ நாள் முதல் நாள் என்னிடம் சொன்னான். அன்று காலையே என் மகன் நான் வேலையை விட்டு விட்டு சம்பளம் வாங்கிவிட்டு வருகிறேன் என சொன்னான். நான் வேலைக்கு போக வேண்டாம் என சொன்னேன். நான் அதன் பின்பு வேலைக்கு சென்று விட்டேன். எனக்கு தொலைபேசி வாயிலாக என் மகன் வெட்டுப்பட்டு இறந்து விட்டதாக கூறினார்கள். திண்டுக்கல் அரசு மருத்துவமனை சென்று நான் என் மகனை பார்த்த போது முகம், தலை, மூக்கு, கண் , நெஞ்சில் காயங்கள் ஏற்பட்டு வெட்டுக் காயத்துடன் காணப்பட்டான். முகம் உருவம் தெரியாத அளவில் இருந்தது. இது சம்மந்தமாக கோபிநாத் மேற்கு காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார். நான் புகார் கொடுக்கலாம் என

சென்ற போது ஏற்கனவே கோபிநாத் புகார் கொடுத்திருந்ததால் அதனையே ஏற்றுக் கொண்டார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

நான் தற்போது முதல்விசாரணையில் சொன்ன விவரங்களைத்தான் போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். போலிசார் என்னை 4,5 முறை விசாரித்தார்கள். சம்பவத்தை பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். கோபிநாத் சொல்லிதான் தெரியும் என்றால் சரிதான். கோபிநாத்,அரவிந்த் ஆகியோர்கள் என் உறவினர்கள் என்றால் சரிதான். என் மகன் மீது சாணார்பட்டி காவல்நிலையத்தில் போக்சோ வழக்கு இருந்தது என்றால் சரிதான். அது சம்மந்தமாக என் மகனுக்கும் பாதிக்கப்பட்ட பெண் குடும்பத்தாருக்கும் அடிதடி சண்டை ஏற்பட்டு காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டு சமரசம் ஏற்பட்டது என்றால் சரிதான். அரவிந்த் பாதிக்கப்பட்ட பெண் குடும்பத்தாருக்கு உறவினர் என்றால் சரிதான். நான் என் மகனால் பாதிக்கப்பட்ட பெண் குடும்பத்தார் மேல் என் மகன் மரணத்திற்கு சந்தேகப்பட்டு புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். என் மகனுக்கும் மகேந்திரனுக்கும் தான் பிரச்சனை இருந்தது. நான் சொன்னது போல், சொன்ன நேரத்தில் சம்பவம் நடக்கவில்லை என்றாலும் போலிசார் கேட்டுக் கொண்டதன் பேரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை – இல்லை.</u>**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

P VELMURUGAN

Digitally signed by P VELMURUGAN
Date: 2025.09.16 20:29:08 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.